©
GOVERNMENT OF TAMIL NADU
2018

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

தமிழ்நாடு அரசிதழ்

சிறப்பு வெளியீடு ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 105A] சென்னை, புதன்கிழமை, மார்ச் 21, 2018
பங்குனி 7, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு-2049

பகுதி IV—பிரிவு 1

தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

2018–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 21–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2018

சட்ட முன்வடிவானது 1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தை மேலும் திருத்தம் செய்கிறது.

இந்த சட்ட முன்வடிவானது இந்தியக் குடியரசின் அறுபத்து ஒன்பதாம் ஆண்டில் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையினால் பின்வருமாறு இயற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டமானது 2018–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் (திருத்த) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இந்தச் சட்டமானது உடனடியாக நடைமுறைக்கு வரும்.

136–D பிரிவிற்குத் திருத்தம்.

2. 1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின் 136–D ஆம் பிரிவில் (23)–ஆம் உட்பிரிவை விட்டுவிடுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 30/1983.

நோக்கக் காரண விளக்கவுரை.

1983–ஆம் ஆண்டு கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 136–D பிரிவின் (23) ஆம் உட்பிரிவின் வகையங்களின்படி, குறுகிய கால கடன் கூட்டுறவு அமைப்பு சங்கத்தில் உள்ள பணியில் பணிநிலை பதவி அமைப்பு முறையானது ரத்து செய்யப்பட்டது. அரசானது தற்பொழுது கூறப்பட்ட சங்கங்களில் திறமையான பணியாளர்கள் பணி ஆற்றுவதற்கு குறுகியகால கடன் கூட்டுறவு அமைப்பு சங்கத்தின் பணியில் பொதுப்பணிநிலை பதவி அமைப்பு முறையை தக்கவாறு மீண்டும் அமைத்து உருவாக்குவதற்கு ஏதுவாக கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் 30/1983–இன் பிரிவு 136–D-ஐ திருத்தம் செய்வதற்கு முடிவு செய்துள்ளது. அதனால் கூறப்பட்ட சங்கங்களானது நல்லமுறையில் செயல்படும் மற்றும் திறமையான முறையில் பல்வேறு சேவைகளை வழங்கும்.

2. இச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

செல்லூர் கே. ராஜூ,
கூட்டுறவுத் துறை அமைச்சர்.

கி. சீனிவாசன்,
செயலாளர்.

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.